28—4—1993 அன்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் மற்றும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினர் வெளிநடப்புச் செய்தது குறித்து அவைமுன்னவர் அவையில் தெரிவித்த கருத்து குறித்து.

1993 ஏப்ரல் 29]

திரு. எஸ். ஜெயக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அமர்ந்து இருக்கின்ற கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் ஆளும் கட்சி வரிசையிலிருந்து சத்தம் போட்டவுடன் அதைக் குறிப்பிட்டுக் காண்பித்தார்களே, இப்பொழுது திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் சபாநாயகரைப் பற்றியும் மாண்புமிகு முதலமைச்சரைப்பற்றியும் ** அதைக் கண்டிக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. வேண்டாம். மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

நண்பகல் 12-00

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கருத்தைச் சொல்வதற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அனுமதித்திருந்தால் எங்கள் கருத்தைச் சொல்லியிருப்பேன் என்று ஒரு வார்த்தை சொன்னார். மீண்டும் மற்றொரு கருத்தை சொல்கிறபோது கருத்தைச் சொல்லிவிட்டு வெளியேறுவேன் என்று சொன்னார். ஆக, வெளியேறுகிற நோக்கத்தோடுதான் அவர் வந்திருக்கிறாரே தவிர வேறு ஒன்றுமில்லை.

5. சிறப்பு கவன ஈர்ப்பு.

மதம் மாறிய தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவர்களுக்கும், தாழ்தப்பட்டவர்களுக்குரிய சலுகைகளை வழங்கவேண்டிய அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செ.கு. தமிழரசன்.

திரு. செ.கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய மேலான அனுமதியோடு மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு ஒரு பிரச்சினையைக்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கொண்டு வருகிறேன். சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதற்காக சமூகப் புரட்சியைச் செய்து வருகின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) நேற்றையமுன்தினம் சிறுபான்மை மக்களுடைய உணர்வுகளை, உரிமைகளைக் காப்பாற்றுகிற வகையிலே மதம் மாறிய வன்னிய கிறிஸ்தவர்களுக்கு அவர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்குரிய அனைத்து சலுகைகளையும் பெறுவார்கள் என்று அறிவித்தார்கள். அவர்கள் யாருடைய ஊதுகுழலாகவோ மாறிவிட்டார்கள் என்று சொன்னவர்களுக்கு சரியான பதிலைச் சொல்கிற வகையிலே (மேசையைத் தட்டும் ஒலி) வேறு எவரும் செய்யமுடியாத அளவுக்கு சிறுபான்மை மக்களுடைய உரிமைகளை, உணர்வுகளை அவர்கள் இங்கே வெளிப்படுத்துகிற வகையிலே மிகப் பெரிய புரட்சியை அன்றைக்குச் செய்தார்கள்.

தாழ்த்தப்பட்ட மக்களைப் பொறுத்தவரையில் மதம்மாறிய தாழ்த்தப்பட்ட கிருஸ்தவர்களுக்கும், அதே தாழ்த்தப்பட்டவர்களுக்குரிய சலுகைகளை வழங்கவேண்டுமென்று நீண்டகாலமாகக் கோரி வருகிறார்கள். மத்திய அரசு இதைச் செய்திட வேண்டும். ஆனால் மத்திய அரசு இதைச் செய்திட முன்வராமலேயே இருக்கிறது. ஆகவே மாநில அரசு இதை வற்புறுத்துமா நம்முடைய இந்த சட்டப் பேரவையிலேயே இதை வலியுறுத்துமா? என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. ஷெட்யூல்டு காஸ்ட்ஆக அறிவிக்க வேண்டுமென்று சொன்னால் அதை மத்திய அரசாங்கம்தான் செய்யவேண்டும். ஏற்கெனவே நான் இங்கிருந்து மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன். எனவே மத்திய அரசு தான் விரைந்து இதில் முடிவெடுக்கவேண்டும். மத்திய அரசை மீண்டும் வற்புறுத்துவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

6. உரிமைப் பிரச்சினை.

பேரவை நடவடிக்கை பற்றி உள்நோக்கம் கற்பித்து தொலைக்காட்சி ஒளிபரப்பிய செய்தி குறித்து பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> உரிமை மீறல் பிரச்சினை பற்றிய தீர்ப்பு.